தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.5.2025) தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். உடன் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஆகியோர் உடன் உள்ளனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.5.2025) ஜெர்மனியில் 16.7.2025 முதல் 27.7.2025 வரை நடைபெறவிருக்கும் உலக அளவிலான பல்கலைக்கழகங்களுக்கிடையேயான FISU விளையாட்டு போட்டியில் பங்கேற்கவுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 12 வீரர், வீராங்கனைகளுக்கு செலவினத்தொகையாக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து மொத்தம் 32.25 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, ஆகியோர் உடனிருந்தனர்.

ஜெர்மனியில் நடைபெற உள்ள பல்கலைக் கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் பங்கேற்கும்

வீரர் - வீராங்கனைகளுக்கு ரூ.32.25 இலட்சத்திற்கான காசோலைகள்! ரூ.4.80 இலட்சத்தில் நவீன விளையாட்டு உபகரணங்கள்!

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, மே 16-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து ஜெர்மனியில் நடைபெற உள்ள பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் கலந்து கொள்ள 12 வீரர், வீராங்கனைகளுக்கு 32.25 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் 9 வீரர், வீராங்கனைகளுக்கு 4.80 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நவீன விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டினை விளையாட்டில் முன்னோடி மாநிலமாக உருவாக்கிட தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை ஏற்படுத்தி, விளையாட்டு வீரர், வீராங்கனைகள் வெளிநாடுகளில் நடைபெறும் விளையாட்டு போட்டிகளில் கலந்துகொள்ள செல்வதற்கான தங்குமிட கட்டணம், விமான கட்டணம், உணவு, அனுமதிக்கட்டணம் உள்ளிட்ட செலவுகளை மேற்கொள்ள நிதியுதவி வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பயன்படுத்த விளையாட்டு உபகரணங்களும் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையின் நிதியுதவி மூலம் வழங்கப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஜெர்மனியில் 16.7.2025 முதல் 27.7.2025 வரை நடைபெறவிருக்கும் உலக அளவில் பல்கலைகழகங்களுக்கு இடையேயான FISU விளையாட்டு போட்டியில் பங்கேற்கவுள்ள தமிழ்நாட்டை சேர்ந்த தடகள வீராங்கனை செல்வி ஏன்ஜெல் சில்வியா, வீரர்கள் செல்வன் ஜெரோம், செல்வன் அஸ்வின் கிருஷ்ணன், செல்வன் ரீகன், கூடைப்பந்து வீரர் செல்வன் சங்கீத் குமார், வீராங்கனை செல்வி தேஜஸ்ரீ, செல்வன் சுகந்தன், கையுந்து பந்து வீராங்கனைகள் செல்வி ஆனந்தி, செல்வி சுஜி, செல்வி கனிமொழி, வீரர் செல்வன் அபிதன், வாள்வீச்சு வீராங்கனை செல்வி கனகலக்ஷ்மி என 12 வீரர், வீராங்கனைகளுக்கு செலவினத்தொகையாக மொத்தம் 32.25 இலட்சம் ரூபாய்கான காசோலைகளை தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து நேற்று முன்தினம் (14.5.2025) வழங்கினார்.

மேலும் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து நீச்சல் வீராங்கனை செல்வி ஸ்ரீ காமினி, இறகுப்பந்து வீராங்கனை செல்வி ஜனாக்ஷி, தடகள வீரர் செல்வன் வாசன், செல்வன் யுகேந்திரன், வீராங்கனைகள் செல்வி ஸ்வேதா, செல்வி ஸ்ரீரேஷ்மா, கேரம் வீராங்கனைகள் செல்வி ஹரினி, செல்வி காவியா என 9 வீரர், வீராங்கனைகளுக்கு மொத்தம் 4.80 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நவீன விளையாட்டு உபகரணங்களை துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்றிய அமைச்சருக்கு தயாநிதி மாறன் எம்.பி. கடிதம்!

சென்னை - பாலக்காடு எக்ஸ்பிரஸ் ரயிலில் பெண் பயணிக்கு விபத்து!

விரைந்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்!

சென்னை, மே 16 -

சென்னை பாலக்காடு எக்ஸ்பிரஸ் (ரயில் எண் 22651) ரயிலில், ஸ்லீப்பர் வகுப்பு பெட்டியின் மிடில் பெர்த் அறுந்து விழுந்ததில் தூங்கிக் கொண்டிருந்த பெண் பயணி ஒருவருக்கு தலையில் காயம் ஏற்பட்டுள்ளது, இதனைத் தொடர்ந்து கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவிற்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடித விவரம் வருமாறு:

சென்னை-பாலக்காடு எக்ஸ்பிரஸ் (ரயில் எண் 22651) ரயிலில், ஸ்லீப்பர் வகுப்பு பெட்டியில் தூங்கிக் கொண்டிருந்த ஒரு பெண் பயணியின் தலையில் மிடில் பெர்த் அறுந்து விழுந்து காயம் ஏற்பட்டுள்ளது. இந்த சம்பவத்தில் உடனடி மருத்துவ உதவி கிடைக்காததும், பாதுகாப்பு கட்டமைப்பில் காணப்படும் குறைபாடுகளும் இந்திய ரயில்வேயின் சேவை தரத்தையும், பயணிகளின் பாதுகாப்பையும் கேள்விக்குள்ளாக்குகின்றன. குறிப்பாக பழைய ரயில்களில் இது மிகுந்த கவலையை ஏற்படுத்துகிறது.

ஊடகங்களில் வெளியாகிய தகவலின்படி, தூங்கிக்கொண்டிருந்த பெண் பயணியரின் மீது மிடில் பெர்த் அறுந்து விழுந்து காயம் ஏற்பட்டுள்ளது. அவரது கணவரும் மற்ற பயணிகளும் தொடர்ந்து ரயில்வே அதிகாரிகளிடம் மருத்துவ உதவி கோரிய போதும், சேலம் வரை சுமார் 90 நிமிடங்கள் எந்தவொரு முதற்கட்ட மருத்துவ உதவி அளிக்கப்படவில்லை. இது போன்ற தாமதங்கள், எந்தப் பொதுப் போக்குவரத்து அமைப்பிலும் ஏற்கத்தக்கதல்ல. இந்திய ரயில்வே போன்ற மிகப்பெரிய அமைப்பில் இது மிகவும் அதிர்ச்சியளிக்கக்கூடியது.

மேலும், சம்பவம் நடந்த ரயில் பெட்டி 19 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஸ்லீப்பர் பெட்டி. மார்ச் 2025இல் இறுதியாக பராமரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டாலும் . இருபது ஆண்டுகளாக சேவையில் உள்ள இத்தகைய பழமையான பெட்டிகள் பாதுகாப்பு மேம்பாடுகள் மற்றும் கட்டமைப்பு பரிசோதனைகள் இன்றி இன்னும் இயக்கப்படுவதே கவலையளிக்கிறது. பயணியின் தவறான கையாளுதலால் இந்தச் சம்பவம் ஏற்பட்டதாக ரயில்வே அதிகாரிகளால் விளக்கம் கூறப்பட்டாலும், ரயில்வேயின் பாதுகாப்பு கட்டமைப்புக்கான பொறுப்பை இது கேள்விக்குள்ளாக்குகிறது.

இந்த சம்பவத்தை முன்வைத்து, ரயில்வே அமைச்சகம் கீழ்க்காணும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்:

தற்போது செயல்பாட்டில் உள்ள 15 ஆண்டுகளுக்கும் மேலான அனைத்து பெட்டிகளிலும் முழுமையான பாதுகாப்பு ஆய்வு நடத்த வேண்டும். பழைய பெட்டிகளை நவீன மற்றும் பாதுகாப்பான ரேக்குகளுடன் விரைவாக மாற்ற வேண்டும். பயண வசதிகள், மேல்படுக்கை பூட்டு அமைப்புகள் மற்றும் மருத்துவ பொருட்கள் உள்ளிட்டவற்றின் பாதுகாப்பு ஆய்வுகளை நிலையான முறையில் செயல்படுத்த வேண்டும்.

அனைத்து நீண்ட தூர ரயில்களிலும் செயல்பாட்டு மற்றும் கையிருப்பு உள்ள முதலுதவி பெட்டிகள் பொருத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்து கொள்ளுங்கள். மேலும் சாத்தியமான இடங்களில், பயிற்சி பெற்ற துணை மருத்துவர்கள், குறிப்பாக இரவு நேர பயணங்களின் போது, உடன் இருக்க வேண்டும். ரயில் பெட்டி வசதிகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவது குறித்து பயணிகளிடையே விழிப்புணர்வை மேம்படுத்துதல் மற்றும் முதலுதவி மற்றும் அவசரகால நடவடிக்கைகளில் ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

இத்தகைய பாதுகாப்பு மீறல்களுக்கு விரைவில் தீர்வு காணும் நடைமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். இந்த சம்பவத்திற்கு காரணமானவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட்டு பொதுமக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்க வேண்டும். இந்திய ரயில்வே, கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரமாக இருக்கிறது. பயணிகளின் பாதுகாப்பையும் தரமான சேவையையும் உறுதிசெய்வதில் சமரசம் செய்யக்கூடாது. நிறுவன பொறுப்புணர்வையும் முறையான சீர்திருத்தத்தையும் வலுப்படுத்துவதற்கான ஒரு எச்சரிக்கை மணியாக இந்த சம்பவம் செயல்படும் என்று நம்புகிறேன்.

இந்த விவகாரத்தில் உங்களின் முழுமையான கவனத்தையும் உடனடி நடவடிக்கையையும் எதிர்பார்க்கிறேன். உங்கள் அக்கறைக்கும், நடவடிக்கைக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

காஷ்மீர், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து

இதுவரை 226 மாணவ - மாணவிகள் தாயகம் திரும்பி உள்ளனர்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பேட்டி!

திருவள்ளூர், மே 16 -

இந்தியா-பாகிஸ்தான் இடையே நடந்த போரை தொடர்ந்து ஜம்மு - காஷ்மீர், பஞ்சாப் மாநிலங்களில் பதற்றமான சூழல் நிலவியது. இதனால் அங்கு வேளாண்மை, தோட்டக்கலை, மீன்வளம், பட்டு வளர்ப்பு, ஆடை வடிவமைப்பு, தேசிய தொழில் நுட்ப கழகம் உள்ளிட்ட உயர் கல்வி பயிலும் தமிழ்நாட்டை சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள், தமிழ்நாடு திரும்ப இயலாமல் அவதிப்பட்டனர். அவர்களை மீட்டு வர தமிழ்நாடு அரசுக்கு வந்த கோரிக்கையை தொடர்ந்து

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி அமைச்சர் சா.மு.நாசர், ஒன்றிய அரசு மற்றும் ஜம்மு - காஷ்மீர், பஞ்சாப் மாநில நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து தேவையான

நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இதைத் தொடர்ந்து அவர்களை விமானம் மற்றும் ரயில் மூலம் அழைத்து வர ஏற்பாடு செய்யப்பட்டது.

அதன் படி மே 13 மற்றும் மே 14ஆம் தேதி மாணவர்கள் போர்க்கால அடிப்படையில் ரயில் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் வந்தனர். அவர்களை தமிழ்நாடு சிறுபான் மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வரவேற்று தமிழ்நாடு அரசு சார்பில் ஏற்பாடு செய்துள்ள சிறப்பு வாகனம் மூலம் மாணவ மாணவிகள் கரூர், தென்காசி, திருப்பூர், தஞ்சாவூர் உள்ளிட்ட தங்களுக்கு சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சா.மு.நாசர்,

"தமிழ்நாடு முதல்வர் தாய் உள்ளத்தோடு, காஷ்மீரில் நடந்து வரும் பதட்டமான காலகட்டத்திலும் கண்ணின் இமை போல இரவு பகல் பாராமல் அரசு இயந்திரங்களை முடக்கி விட்டு மாணவர்களை தமிழ்நாடு இல்லத்திற்கு அழைத்து வந்து தற்பொழுது தாயகம் அழைத்து வந்த உள்ளார். அதில் 226 மாணவ மாணவிகள் பத்திரமாக தமிழ்நாடு அழைத்து வரப்பட்டுள்ளனர்" என்றார்.

இந்த நிகழ்ச்சியின் போது அயலக தமிழர் நலத்துறை ஆணையர் வள்ளலார். அயலக தமிழர் நலத்துறை வாரிய உறுப்பினர் ராம் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

தமிழ்நாடு முதல்வர், திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட ஒன்றிய,நகர,பேரூர் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் அறிமுக கூட்டம் இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சம்பத் ராஜா அனைவரையும் வரவேற்று பேசினார் நிகழ்ச்சியில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் ஏ.என். இன்பா ரகு, இராமநாதபுரம் நகர்மன்ற தலைவர் ஆர்.கே.கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம், மற்றும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ரமேஷ் கண்ணா, குமரகுரு, சன் சம்பத்குமார், சத்தியேந்திரன்,கோபிநாத் தவ்பீக் ரகுமான் தலைமைக் கழக சிறப்பு பேச்சாளர்கள், கோவை லெனின் மற்றும் இளமாறன், உட்பட ஒன்றிய,நகர,பேரூர் கழக நிர்வாகிகள் அனை வரும் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

வசந்தம் கார்த்திகேயன்–நெல்லிக்குப்பம் புகழேந்தி–பரசுராமன்–ஐஸ்வர்யா சிறப்புரை!

கள்ளக்குறிச்சி, மே 16-

கள்ளக்குறிச்சி தெற்கு ஒன்றிய கழகம் சார்பில் நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் இது பல்லாண்டு எனும் திராவிட மாடல் அரசின் மாபெரும் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம், தென்கீரனூர் ஊராட்சி, கலைஞர் திடலில் தெற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் கே.ராமமூர்த்தி தலைமையில் நடை பெற்றது.

இந்த மாபெரும் சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்தில், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன்,

கழகக் கொள்கை பரப்பு இணைச் செயலாளர், தமிழ்நாடு தோல் உற்பத்தி தொழிலாளர்கள் நல வாரிய தலைவர் நெல்லிக்குப்பம் புகழேந்தி, தலைமைக் கழகப் பேச்சாளர் சிறு வானூர் பரசுராமன், இளம் பேச்சாளர் ஐஸ்வர்யா ஆகியோர் கலந்து கொண்டு, திராவிட மாடல் அரசின் சிறப்பு திட்டங்கள் மற்றும் நான்காண்டு கால மக்கள் நலத்திட்டங்கள் குறித்த சாதனைகளை எடுத்துரைத்தனர்.

மேலும் இந்த மாபெரும் சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்தில், மாநில,மாவட்ட, ஒன்றிய, பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதி நிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

தி.மு.க. மாணவர் அணி

மாநகர அமைப்பாளர்-துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் காஞ்சிபுரம், வேலூர், நாகர்கோவில் ஆகிய மாநகரங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம்

காஞ்சிபுரம் மாநகரம்

அமைப்பாளர் - எம்.எஸ்.பி. பாரதிதாசன், பி.சி.ஏ.,
நெ.46/76, ரோட்டுத் தெரு,
வெங்கடாபுரம்,
செவிலிமேடு, காஞ்சிபுரம்.

துணை அமைப்பாளர்கள் - 1) டி. கீர்த்திவாசன், பி.சி.ஏ., கண்ணகிபுரம், ஓரிக்கை, காஞ்சிபுரம். 2)பு.திருவள்ளுவன், டி.இ.சி.இ., நெ.28/15, புண்ணிய கோட்டீஸ்வரர் கோயில் தெரு, காஞ்சிபுரம். 3) ஆர். பெருமாள், டி.எம்.இ., நெ.28, திரௌபதி அம்மன் நகர், டோல்கேட், காஞ்சிபுரம். 4) பி. பிரேம்குமார், பி.இ., நெ.111/60, பஞ்சுப்பேட்டை பெரியத் தெரு, காஞ்சிபுரம். 5) ம. ஆகாஷ்ராம், பி.இ., எம்.பி.ஏ., நெ.31/5, மிலிட்டரி ரோடு, சின்ன ஜயங்குளம், காஞ்சிபுரம். 6) நந்தினி முனுசாமி, பி.சி.ஏ., எல்.எல்.பி., பிளாட் நெ.17, எட்டியம்மான் தெரு, அண்ணாமலை நகர், காஞ்சிபுரம்.

வேலூர் மாவட்டம்

வேலூர் மாநகரம்

அமைப்பாளர் - ஆர். அருண்
22, பெரியஅலிபுரான் தெரு,
வேலூர்.

துணை அமைப்பாளார்கள் - 1) என்.சுகுமார், எண்.37, நைனியப்பன் தெரு, காகிதப்பட்டரை, வேலூர். 2) த.சுரேஷ்குமார் எண்.1/67, தென்னமர தெரு, பலவன்சாத்துகுப்பம், வேலூர் 3) பா.பிரதீப் எண்:75, எட்டியம்மன் கோவில் தெரு தோட்டப்பாளையம், வேலூர் 4) ர.சதீஷ், எண்:7, 2 வது தெரு, பாரதிநகர், காட்பாடி, வேலூர் 5) த.அப்பு (எ) முத்துகுமரன் எண் 26, கலாஸ் கோதண்டராமசாமி கோவில் தெரு, கலாஸ்பாளையம், வேலூர். 6) அ.கலிமுல்லா, எண்: 9/26, ஆரோக்கியமாதாகோவில் தெரு சைதாப்பேட்டை, வேலூர் 7) கு.மம்தாகுமார், எண்:129, ஆற்காடு சாலை காகிதப்பட்டரை, வேலூர் 8)ஜி.மகேஷ் பாபு எண்: 3/271, காமராஜர் தெரு, விருதம்பட்டு, வேலூர்

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

நாகர்கோவில் மாநகரம்

அமைப்பாளர் - ஜெ.முகம்மது ஸாலிஹ்,
1/3 பி, கிறிஸ்டோபர் காலனி ரோடு
பெருவிளை, நாகர்கோவில்

துணை அமைப்பாளர்கள் - 1) அ.பிளாசியஸ் ராய் 45, வண்ணார் தெரு, சி.பி.எச்.ரோடு வடசேரி, நாகர்கோவில் 2) ரா.ரெகுவரன், 91/ஜி, அருணாச்சலம் நாடார் தெரு, வடசேரி, நாகர்கோவில் 3) எஸ்.ஆர்.சுகுமார் மேலக்காட்டுவினை, மணிக்கட்டிப்பொட்டல் அஞ்சல் கன்னியாகுமரி 4) ரா.ஜகன்பிரபு 14/55, சிங்களேயர்புரி, தெங்கம்புதூர், தெங்கம்புதூர் அஞ்சல், நாகர்கோவில் 5) சு.விஷ்ணு 16, மேட்டுத்தெரு, கோட்டார், நாகர்கோவில் 6) பி.பெமினா 216 டி. வைத்தியநாதபுரம், வீரசிவாஜி தெரு கோட்டார், நாகர்கோவில் 7) வ.ரபேக்கா, 26எம், அமுதசுரபி காம்பிளக்ஸ், செந்தூரான் நகர், டிவிடி காலனி, நாகர்கோவில்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 15.05.2025

இரா.ராஜீவ்காந்தி,
செயலாளர்
தி.மு.க. மாணவர் அணி